புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# திருக்குறளின் பண்பாட்டு மரபில் பெருங்காப்பியங்கள்

*பா. விஜயராமன்,*
*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழ்த்துறை, திரு. வி.க. அரசு கலைக்கல்லூரி,*
*திருவாரூர் – 610 003 தமிழ்நாடு, இந்தியா.*

*முன்னுரை :*

*திருக்குறள் சங்கம் மருவிய காலத்து நீதிநூலாகவும் பண்பாட்டு நூலாகவும் போற்றப்படுகிறது. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் தனித்த இடம் பெற்ற அறநூலாகவும் திருக்குறள் விளங்குகிறது. தமிழ் இலக்கியம் காப்பியங்களுக்கெனத் தனி இடம் வகுத்து, ஐம்பெரும் காப்பியங்கள் தோன்றிய காலத்தைக் காப்பிய காலம் எனச் சுட்டிப் பெருமை செய்கிறது. தமிழ்க் காப்பியங்கள் தமிழர்களின் பண்பாட்டு மரபில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் பல. சான்றாகக் கண்ணகி மதுரையை எரித்த நாளாதலால் தமிழர்கள் வெள்ளிக் கிழமையை வழிபாட்டுக்கான முக்கிய தினமாகக் கருதுவதும், கண்ணகியின் பொற்சிலம்புகள் கோவலன் மரணிப்பதற்குக் காரணமாய் அமைவதால் தமிழ்ப் பெண்டிர் பொன்னாலான காலணிகளை அணிவதைத் தவிர்ப்பதும் சிலப்பதிகாரம் ஏற்படுத்திய பண்பாட்டுத் தாக்கமாகும். இவ்வண்ணம் தமிழின் பெருங்காப்பியங்கள் தமிழர்களின் பண்பாட்டு மரபில் தாக்கத்தை ஏற்படுத்தி இரண்டறக் கலந்துள்ளன. இக்கட்டுரையானது தமிழர்களின் பண்பாட்டு மரபில் தாக்கத்தை விளைவித்துள்ள பெருங்காப்பியங்களின் பண்பாட்டு மரபில் திருக்குறள் ஏற்படுத்தியுள்ள பண்பாட்டுத் தாக்கம் குறித்து ஆராய விழைகிறது.*

*ஆய்வு நெறிமுறைகள் :*

*ஒப்பாய்வு முறைத் திறனாய்வு, தருக்க முறைத் திறனாய்வு, தொகுப்பு முறைத் திறனாய்வு, பகுப்பு முறைத் திறனாய்வு, மதிப்பீட்டு முறைத் திறனாய்வு மற்றும் விளக்க முறைத் திறனாய்வுக் கொள்கைகளைக் கருத்தில் கொண்டு இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.*

*திருக்குறளின் தாக்கம் :*

*நூற்பயன் பற்றிக் கூறுமிடத்து*

*“அறம்பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயனே” (நன்னூல், பொது, 10)*

*என்று பவணந்தியாரின் நன்னூல் கூறுவதனின்றும், காப்பிய இலக்கணம் குறித்துக் கூறுமிடத்து*

*“நாற்பொருள் பயக்கும் நடைநெறித்து ஆகி” (தண்டியலங்காரம், 7 : 5)*

*என்று தண்டியாசிரியரின் தண்டியலங்காரம் கூறுவதனின்றும் நூற்பயன் குறித்த இலக்கணத்திலும் காப்பிய இலக்கணத்திலும் அறம், பொருள், இன்பம், வீடுபேறு ஆகிய நான்கும் முக்கியத்துவம் பெறுவது அறியத்தக்கது. இவற்றுள் அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பொருள்களைக் கொண்டு இலங்கும் திருக்குறள் காப்பிய ஆசிரியர்களுக்கு மேற்படி நாற்பொருளில் முப்பொருளை நன்கு உணர்த்தவும், பொருள் விளக்கம் செய்யவும் முதன்மையாகவும் துணையாகவும் நிற்கிறது.*

*பெருங் காப்பியங்களில் திருக்குறள் :*

*தமிழின் பெருங்காப்பியங்களாகச் சுட்டப்படும் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகிய ஐந்தினுள் காப்பிய நோக்கத்தை விளக்குதல்,*

பாத்திரங்கள் வழி வெளிப்படுதல், குறள் முழுமையுமாக வெளிப்படுதல், குறள் செம்பாகமாக வெளிப்படுதல், சொல்லாட்சிகளாக வெளிப்படுதல், விளக்கம் பெறுதல் ஆகிய வகையில் எவ்வகையேனும் திருக்குறள் இடம் பெற்றுக் காப்பியங்களின் தமிழ்ப் பண்பாட்டு மரபை வெளிப்படுத்த துணை நிற்கிறது. அஞ்ஞனம் காப்பியங்களின் உருவாக்கத்தில் திருக்குறள் விளைவித்துள்ள பண்பாட்டு மரபுகளையும் தாக்கங்களையும் தமிழ் பண்பாட்டு மரபுக் கோட்பாட்டின்படி அகம் – புறம் எனப் பிரித்து இக்கட்டுரையில் காண்போம்.

புறவாழ்வுக்கான பண்பாடு

புற வாழ்வுக்கான தமிழர் பண்பாட்டில் பெண்மையைப் போற்றுதல், விருந்தோம்பல் செய்தல் போன்றவை அன்றும் இன்றும் என்றும் உலகோர் உவந்து போற்றுவன ஆகும். அத்துடன் தனிநபருக்கான பண்பாடும் அரசாட்சிக்கான பண்பாடும் நீதி இலக்கியம் தோன்ற வித்திட்ட சிறப்பு கொண்டவை ஆகும். இவற்றைப் புறவாழ்வுக்கான பண்பாட்டுத் தாக்கங்களாகக் கொண்டு திருக்குறளுக்கும் பெருங்காப்பியங்களுக்கும் உள்ள பண்பாட்டுத் தொடர்பை முதற்கண் காண்போம்.

குறள் வழியில் காப்பியப் பெண்கள் :

திருவள்ளுவர் வகுக்கும் பெண்மையின் பண்பாட்டு இலக்கணத்தின்படி “தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள் ” (குறள், 55) எனும் பண்பாட்டுத் தகைமையில்

“தெய்வந் தொழாஅள் கொழுநற் றெழுவாளைத்
தெய்வந் தொழுந்தகைமை திண்ணிதால் – தெய்வமாய்
மண்ணக மாதர்க்கு அணியாய கண்ணகி
விண்ணக மாதர்க்கு விருந்து” (சிலப்பதிகாரம், கட்டுரை காதை, வெண்பா)

எனும்படி கண்ணகி அமைவதும்,

“தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றஅப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்” (மணிமேகலை, 22:59-61)

எனும்படி சாத்தனார் குறள்வழி நின்று பெண்மையின் பண்பாட்டு இலக்கணம் காட்டுவதும் “காமனை யென்றும் சொல்லார் கணவர்க்கை தொழுது வாழ்வார்” (சீவக சிந்தாமணி, 1598) எனும் படி திருத்தக்கத் தேவரும் அப்பண்பாட்டு மரபைத் தொடர்வதும், முழுமையாகக் கிடைத்திடாத போதும் கிடைத்துள்ள பாடல் வரிகளுள்

“நாடும் ஊரும் நனிபுகழந் தேத்தலும்
பீடு செம்மழை பெய்கெனப் பெய்தலும்
சுட லாற்றவர் நல்லது கூறுங்கால்
பாடு சால்மிகு பத்தினிக் காவதே” (வளையாபதி, 7)

எனும் படி வளையாபதியும் பெண்மைக்கான பண்பாட்டுச் சிறப்பைத் திருக்குறளினின்று பெறுவதும், குண்டலகேசியும் முழுமையாகக் கிடைத்திருக்குமாயின் இப்பண்பாட்டுத் தாக்கத்தை அதனினுள்ளும் காண இடம் இருப்பதும் காப்பியப் பெண்கள் திருக்குறளின் பண்பாட்டு வெளிச்சத்தில் துலக்கம் பெறுவதைக் காட்டுகிறது. இதனால் குறள் காட்டும் பெண்மையின் பண்பாட்டு ஒளியின் பிரதிபலிப்பைக் காப்பியங்களில் காணலாகிறது என்ற பேருண்மை புலப்படும்.

விருந்தோம்பும் பண்பாடு :

தமிழர்களின் தனிச் சிறப்பான பண்பாடாகப் போற்றப்படுவது விருந்தோம்பல் ஆகும். இல்லற மாண்பின் இனிய பண்பாடாகத் திருவள்ளுவர் விருந்தோம்பலை உயர்வுபடுத்தும் இப்பண்பாட்டு வெளிச்சத்தைக் கலங்கரை விளக்கமெனக் காப்பிய ஆசிரியர்கள் மேலும் உயர்த்திப் பிடிப்பதை “செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்” (குறள், 86) என்ற குறட்பாவின் தாக்கத்தில் “வருவிருந் தோம்பி மனையற முட்டாப் பெருமனை கிழத்தியர்” (சிலப்பதிகாரம், 22 : 131, 132) என்று இளங்கோவடிகள் உரைப்பதினின்றும் “அற்றார்க்கொன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம் பெற்றாள் தமியள்மூத் தற்று.” (குறள். 1007) என்ற குறட்பாவின்

*தாக்கத்தில் ஆபுத்திரன் கூற்றாக "அருந்துவோர்ப் பெறாது குமரி மூத்த என் பாத்திரம்" (மணிமேகலை, 14 : 76, 77) சாத்தனார் உரைப்பதினின்றும் அறிய முடிகிறது.*

*தனிநபர் பண்பாடு :*

*தனிநபரின் உயரிய பண்பாட்டு ஒழுக்கம் அவர்களது அறக்கடப்பாடு ஆகும். இவ்வறக்கடப்பாட்டை எப்போதும் ஆற்றும் வகையில் "அன்றறிவாம் என்னாது அறஞ் செய்க" (குறள், 36) என்று கூறும் வள்ளுவத்தின் தாக்கத்தை*

*"மாற்றருங் கூற்றம் வருவதன் முன்னம்*
*போற்றுமின் அறம்" (மணிமேகலை, 25 : 49, 50)*

*என்ற மணிமேகலை வரிகளில் காண முடிகிறது. அறம் என்பதன் உயரிய சொல்லாட்சியான "அறவாழி" (குறள், 8) எனும் வள்ளுவரின் சொல்லாட்சியை "அறவாழி அலகையிலாக் குணக்கடல்" (சீவக சிந்தாமணி, 3023) என்ற சிந்தாமணியின் வரியில் காண முடிகிறது.*

*ஈகைப் பண்பாடு :*

*அறம் செய விரும்பும் அறத்திற்கு அடிப்படையான ஈதல் இசைபட வாழும் உயரிய வாழ்வின் குலப் பண்பாட்டை "இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல் குலனுடையான கண்ணே உள." (குறள், 223) என்ற குறட்பாவில் திருவள்ளுவர் விளக்குவதன் தாக்கத்தை*

*"இலம்பெரி தெனஇரந் தவர்கட் கேந்திய*
*கலஞ்சொரி காவலன் கடகக் கையினை" (சீவக சிந்தாமணி, 2995)*

*எனும் சீவக சிந்தாமணி வரிகளில் காண முடிகிறது.*

*ஐந்தடக்கல் பண்பாடு :*

*இல்லறத்தாருக்கும் துறவறத்தாருக்கும் அடக்கத்தை அமரருள் உய்க்கும் பண்பாடாகத் திருவள்ளுவர் கூறுவார். "ஆமைபோல் ஐந்தடக்கல்" (குறள், 125) என்று வள்ளுவர் கூறுவதை "அடங்கலால் ஆமை போன்றும்" (சீவக சிந்தாமணி, 1895), "ஐவகைப் பொறியும் வாட்டி ஆமையின் அடங்கி" (சீவக சிந்தாமணி, 2824) சீவக சிந்தாமணியில் திருத்தக்கத் தேவர் பிரதிபலிப்பதைக் காண முடிகிறது.*

*இன்னா செய்யாத இனிய பண்பாடு :*

*இன்னா செய்யாமை எனும் இனிய தனிநபர் பண்பாட்டை வளர்க்கும் வகையில் வினை விளைவு கோட்பாட்டைத் திருவள்ளுவர் "பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா பிற்பகல் தாமே வரும்." (குறள், 319) என வகுப்பார். இதனை இளங்கோவடிகள் அப்படியே எடுத்தாள்வதை*

*"முற்பகல் செய்தான் பிறன்கேடு தன்கேடு*
*பிற்பகல் காண்குறூஉம் பெற்றிய காண்" (சிலப்பதிகாரம், 21 : 3, 4)*

*எனும் அடிகளில் காண முடிகிறது.*

*இன்சொல் உரைக்கும் பண்பாடு :*

*இனிய சொற்களைச் சொல்வதே சொற்களுக்கான பண்பாட்டு ஒழுக்கம் என்பதை "இன்சொ லினதே அறம்" (குறள், 93) என வரையறுத்துப் பண்புள்ளவர்கள் இன்சொல்லையே கூறுவர் என்பதை "இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம் செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்." (குறள், 91) என்ற குறட்பாவில் வள்ளுவர் காட்டுவதை*

*"அன்புட னளைஇய அருண்மொழி யதனால்*
*அஞ்செவி நிறைத்து நெஞ்சகம் குளிர்ப்பித்து" (மணிமேகலை, 5 : 63, 64)*

*என்று சாத்தனார் மணிமேகலையில் எடுத்தாள்வதைக் காண முடிகிறது. வன்சொற்கள் உரைக்காது நாவைக் காத்தலை "யாகாவர் ஆயினும் நாகாக்க காவாக்கால்" (குறள், 127) எனத் வள்ளுவர் உரைப்பதை "காவா நாவிற் கனகனும் விசயனும்" (சிலப்பதிகாரம், 26 : 159) என்று இளங்கோவடிகள் எடுத்துரைப்பதைக் காண முடிகிறது. இச்சொல்லாட்சி திருக்குறளின் பாதிப்பிற்குட்பட்டது என்பது தெளிவு. மேற்காணும் குறட்பாவோடு "ஆக்கமும்கேடும் அதனால் வருதலால் காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு" (குறள், 642) எனும் குறட்பாவையும் இணைத்து வெளிப்படும் குறளின் தாக்கத்தை*

*"ஆக்கப் படுக்கும் அருந்தளைவாய்ப் பெய்விக்கும்*
*போக்கப் படுக்கும் புலைநரகத்து உய்விக்கும்*
*காக்கப் படுவன இந்திரியம் ஐந்தனுள்*
*நாக்கல்ல தில்லை நனி பேணுமாறே" (வளையாபதி, 13)*

*எனும் வளையாபதி வரிகளில் காண முடிகிறது.*

*குடிமைப் பண்பாடு :*

*சொல்லைப் போலவே செயலிலும் குற்றம் இல்லாமல் விளங்குவதைக் குடிமைக்கான பண்பாடாக வகுக்கும் திருவள்ளுவர் அப்பண்பாட்டைக் கொள்ளாது போனால் அது மிகப்பெரும் குற்றமாகப் புலப்படும் என்பதை "குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின் மதிக்கண் மறுபோல் உயர்ந்து." (குறள், 957) என்ற குறட்பாவில் காட்டுவார். இதன் தாக்கத்தை*

*"அந்திமாலை நீங்கிய பின்னர்*
*வந்து தோன்றிய மலர்கதிர் மண்டலம்*
*சான்றோர் தங்கண் எய்திய குற்றம்*
*தோன்றுவழி விளங்கும் தோற்றம் போலத்" (மணிமேகலை, 6 : 1, 4)*

*என்ற மணிமேகலை வரிகளில் காணலாம்.*

*நன்மக்கள் ஆற்றும் பண்பாடு :*

*நன்மக்களைப் பெற்று இம்மக்களைப் பெற என்ன தவம் ஆற்றினரோ என உலகம் புகழும் வகையில் மக்கட்பேற்றை உயரச் செய்வதைப் பெற்றோர்களின் பண்பாடாக "இவன் தந்தை என்னோற்றான் கொல் எனும் சொல்" (குறள், 70) எனக் குறிப்பிடும் குறளின் குன்றா விளக்கத்தை*

*"எத்துணைத் தவஞ்செய் தான்கொல் என்றெழுந் துலக மேத்த*
*வித்திய புகழி னாற்கு விருநதர சியற்றி னான்" (சீவக சிந்தாமணி, 2567)*

*எனும் சிந்தாமணியின் வரிகளில் காண முடிகிறது.*

*உயிர்நேயப் பண்பாடு :*

*எவ்வுயிர்க்கும் துன்புறுத்தல் செய்யாத, எவ்வுயிரையும் தன்னுயிர் போல் நேசிக்கும் உயிர்நேயப் பண்பாட்டை "தன்னுயிர்க் கின்னாமை தானறிவான் என்கொலோ மன்னுயிர்க் கின்னா செயல்." (குறள், 318) என்ற குறட்பாவில் திருவள்ளுவர் கூறுவதை*

*"தன்னுயிர் தான்பரிந் தோம்பு மாறுபோல்*
*மன்னுயிர் வைகலும் ஓம்பி வாழுமேல்*
*இன்னுயிர்க் இறைவனாகும்" (சீவக சிந்தாமணி, 3107)*

*என்னும் சிந்தாமணியின் வரிகளில் காண முடிகிறது.*

*அருளுடைமையின் பண்பாடு :*

*பல்லுயிர் ஓம்பலின் உயரியப் பண்பாட்டை அருள் எனும் சொல்லாட்சியால் சிறப்பிக்கும் திருவள்ளுவர் அத்தகையோருக்கு இருள் சேர்ந்த உலகம் இல்லை என்பதை "அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை இருள்சேர்ந்த இன்னா உலகம் புகல்." (குறள், 243) எனும் குறட்பாவில் காட்டுவதை*

*"அருளைப் பொருளா அறஞ்செய்து வான்கண்*
*இருளில் இயல்பு எய்தாதது என்னோ நமரங்காள்" (வளையாபதி, 20)*

*எனும் வளையாபதி வரிகளில் காண முடிகிறது.*

*துறவறப் பண்பாடு :*

*துறவறத்தாருக்கான உயரிய பிறப்பறுக்கல் பண்பாட்டை விளக்குமிடத்து*

*"மற்றும் தொடர்பாடு எவன்கொல் பிறப்பறுக்கல்*
*உற்றார்க்கு உடம்பும்மிகை யாவையுள் வழிப்*
*பற்ற வினையாய்ப் பலபல யோனிகள்*
*அற்றா யுழலும் அறுத்தற் கரிதே" (வளையாபதி, 42)*

வளையாபதி திருக்குறளை முழுமையாக எடுத்தாள்வதை மேற்காணும் பாடலில் காண முடிகிறது.

*அரசாட்சிக்கான பண்பாடு :*

செங்கோன்மையோடு கொடுங்கோன்மை இன்றியும் வெருவந்த செய்யாமலும் குடிகாத்து ஆள்வதை "குடிபுறங் காத்தோம்பி" (குறள், 549) என்று அரசாட்சிக்கான பண்பாடாக வள்ளுவர் கூறுவதை

"கொற்றங் கொண்டு குடிபுறங் காத்துச்
செற்றத் தெவ்வர் தேஎந்தம தாக்கியும்" (மணிமேகலை, 23: 11, 12)

என்ற மணிமேகலை வரிகளில் காண முடிகிறது. இப்பண்பாட்டுக்கு மாறாக நடப்பதைப் பண்பாட்டு இழுக்காகக் கருதுவதை "அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீர்அன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை" (குறள். 555) எனக் குறிப்பிடுவதை

"அல்லல் உற்று அழுவாளைக் கண்டேங்கி
மல்லல் மதுரையார் எல்லாருந் தாமயங்கிக்" (சிலப்பதிகாரம், 19 : 15, 16)

என இளங்வோடிகள் சிலப்பதிகாரத்தில் எடுத்தாள்வதைக் காண முடிகிறது.

முறைகோடி அரசாள்வதை ஏற்காதவர் திருவள்ளுவர். முறைகோடலால் தானம், தவம் ஆகிய இல்லற மற்றும் துறவற அறப் பண்பாட்டு ஒழுக்கம் நிலைபெறக் காரணமாக அமையும் மழை பாதிப்புறும் என்பதை "முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி ஒல்லாது வானம் பெயல்" (குறள், 559) என்ற குறட்பாவில் குறிப்பிடுவார். இக்குறட்பாவின் தாக்கத்தை

"வானம் மும்மாரி பொழிக மன்னவன்
கோள்நிலை திரியாக் கோலோன் ஆகுக" (மணிமேகலை, 1 : 32, 33)

என மணிமேகலையில் சீத்தலைச் சாத்தானர் கூறுமிடத்துக் காணலாம். மேலும் இதன் தாக்கத்தை

"கோள்நிலை திரிந்து நாழி குறைபடப் பகல்கண் மிஞ்சி
நீணில மாரி யின்றி விளைவஃகிப் பதிய நீடி" (சீவக சிந்தாமணி, 255)

எனும் திருத்தக்கத் தேவரின் சிந்தாமணி வரிகளிலும் காண முடிகிறது.

*அக ஒழுக்கப் பண்பாடு :*

தலைவன் தலைவியரின் அன்பைத் அன்பின் ஐந்திணையாக உலகப் பண்பாடுகளுக்கு முன்மாதிரியாகத் திணைக்கோட்பாடாக வகுத்து ஏற்றிப் போற்றிய மரபு உடையது தமிழ் மரபு. அக ஒழுக்கத்தைக் களவியலாகவும் கற்பியலாகவும் கோட்பாடு அமைத்து அதன் வழி ஒழுகும் பண்பாட்டுச் சிறப்பதைச் சங்க காலந்தொட்டே தமிழர்கள் ஒழுகி வருவது கண்கூடு. இதனை,

"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்" (தொல்காப்பியம், 1038 : 1, 2)

என்று பண்பாட்டுக் காப்பாகத் தொல்காப்பியமும் உறுதி செய்வது கருத்தில் கொள்ளத் தக்கது. அவ்வகையில் தமிழின் அக ஒழுக்க பண்பாடு தனித்த சிறப்புடையது. அச்சிறப்பைத் திருக்குறளின் வழி நின்று காப்பியங்களும் ஏற்றிப் போற்றுவதைக் காண முடிகிறது.

*குறளின் அகத்தில் தோயும் காப்பியங்கள் :*

"கண்ணுள்ளார் காதலவராக" (குறள், 1127) என்ற குறளின் தாக்கத்தை "கண்ணுளார் நுங்காதலர் ஒழிககாமம் ஈங்கென" (சீவக சிந்தாமணி, 72) என்பதிலும், "ஒரு நோக்கு நோய் நோக்கொன்று அந்நோய்க்கு மருந்து" (குறள், 1091) எனும் குறளின் சாரத்தை "மாண்பில்நஞ்சு மமிர்தமே போல்குணத்த பொருகயற்கண்" (சீவக சிந்தாமணி, 166) என்பதிலும், "பாலொடு தேன்கலந் தற்றே" (குறள், 1121) எனும் வள்ளுவத்தை "பான் மடுத்துத் தீந்தேன் பருகுவாள் போனோக்கி" (சீவக சிந்தாமணி, 1044) என்பதிலும் "தாக்கணங்கு" (குறள், 1082) எனும் வள்ளுவரின் சொல்லாட்சியை "தாக்கணங்கோ மகளோ எனத் தாழ்ந்தான்" (சீவக சிந்தாமணி, 1473) என்பதிலும் திருத்தக்கத் தேவரின் வரிகளில் காண முடிகிறது.

*களவியலின் பண்பாட்டுத் தாக்கம் :*

"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை மாதர்கொல் மாலுமென் நெஞ்சு" (குறள், 1081) எனும் குறளின் தாக்கத்தை

"போது லாஞ்சிலை யோபொரு வேற்கணோ
மாது லாமொழி யோமட நோக்கமோ
யாது நானறி யேனணங் கன்னவள்
காத லாற்கடை கின்றது காமமே" (சீவக சிந்தாமணி, 1308)

எனும் சீவக சிந்தாமணியின் வரிகளிலும் காண முடிகிறது.

"அனிச்சமும் அன்னதின் தூவியும் மாதர் அடிக்கு நெருஞ்சிப் பழம்." (குறள், 1120) என்பதன் தாக்கத்தை

"அம்மெல் லனிச்சம் மலரும் அன்னத் தூவியும்
வெம்மை யாமென் றஞ்சி மெல்ல மிதியாத" (சீவக சிந்தாமணி, 2454)

எனும் வரிகளிலும் காணலாகிறது. "நெய்யால் எரிநுதுப்பேம்" (குறள், 1148) என்ற வள்ளுவரின் சொல்லாட்சியை "அகையழல் அழுவந்தன்னை நெய்யினால் அவிக்கலாமே" (குண்டலகேசி, 5) எனும் குண்டலகேசியின் வரியில் காண முடிகிறது.

கற்பியலின் பண்பாட்டுத் தாக்கம் :

"கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப் பெண்ணின் பெருந்தக்க தில்." (குறள், 1137) எனும் குறட்பாவின் தாக்கத்தை

"எண்ணில் காமம் எரிப்பினு மேற்செலாப்
பெண்ணின் மிக்கது பெண்ணலது இல்லையே" (சீவக சிந்தாமணி, 998)

எனும் சீவக சிந்தாமணியின் வரிகளில் காண முடிகிறது.

முடிவுரை :

தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்பிற்கான தனித்த அடையாளங்களாகத் திகழும் பெருங்காப்பியங்களில் அதன் ஆசிரியர்கள் இலக்கியத்தின் உயரிய பண்பாட்டுச் சிறப்பைத் திருக்குறளின் பண்பாட்டு பாதிப்பில் வெளிப்படுத்தியுள்ளதனின்று பின்வரும் முடிவுகள் பெறலாகின்றன.

1. தமிழ் இலக்கியத்தின் பண்பாட்டுத் தாக்கத்தை அதன் செவ்வியல் தாக்கத்தோடு எடுத்துரைக்கும் தனிச்சிறப்போடு எழுந்த அறநூலான திருக்குறளின் பண்பாட்டுத் தாக்கங்களை உள்வாங்கிய வண்ணம் காப்பிய ஆசிரியர்கள் காப்பியங்களைப் படைத்துள்ளமையை அறிய முடிகிறது.
2. காப்பியங்கள் மூலம் உணர்த்த விழையும் பண்பாட்டுச் சிறப்புகளைத் திருக்குறளின் அடியொற்றியும், பின்னணியோடும் நயம்பட காப்பிய ஆசிரியர்கள் எடுத்துரைப்பதை உணர முடிகிறது.
3. பெருங்காப்பிய ஆசிரியர்கள் திருக்குறளைப் பண்பாட்டு இலக்கண நூலாகக் கருதி அவ்விலக்கண நூலின் வழி நின்று பண்பாட்டு வழுவின்றிக் காப்பிய இலக்கியங்களைக் கண்டுள்ளமையைத் தெளிய முடிகிறது.
4. அகம், புறம் எனும் தமிழ்மரபு கோட்பாடுகளை ஏற்றுக் குறள் காட்டும் அகம் மற்றும் புற பண்பாட்டு மரபுகளின் அடிப்படையில் பெருங்காப்பிய ஆசிரியர்களும் பண்பாட்டு பயணத்தை மேற்கொண்டுள்ளமையைக் குறள் மற்றும் காப்பிய வரிகளின் ஒப்பீடுகளில் விளங்கிக் கொள்ள முடிகிறது.
5. பெருங்காப்பியங்களைத் தொடர்ந்து எழுந்த காப்பியங்களை மேலாய்வு செய்வதன் மூலமாகக் குறள் காட்டும் பண்பாட்டு மரபு விலகாத வண்ணம் பிற்காலக் காப்பிய ஆசிரியர்கள் சென்றுள்ள தடத்தை விரிந்த ஆய்வு பரப்பிற்குள் கொணர வேண்டிய ஆய்வுத் தேவையும் அவசியமும் இருப்பது இவ்வாய்வினின்று அறியத் தக்கது.

பார்வை நூல்கள் :

1. ஜகந்நாதன்.கி.வா., (2004), திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு, (இரண்டாம் பதிப்பு) ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம், பெரியநாயக்கன்பாளையம், கோயம்புத்தூர் – 641020

2. சுப்பிரமணியன்.ச.வே., (2010) சிலப்பதிகாரம், (ஐந்தாம் பதிப்பு) கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தியாகராய நகர், சென்னை – 600 017

3. தண்டபாணி. துரை, (2001), மணிமேகலை, (முதல் பதிப்பு) உமா பதிப்பகம், #37 (71). பவளக்காரத் தெரு, மண்ணடி, சென்னை – 600 001

*4. மாணிக்கவாசகன். ஞா, (2007) சீவக சிந்தாமணி (3 பாகங்கள்), (முதல் பதிப்பு) உமா பதிப்பகம், 18, (பழைய எண் 171), பவளக்காரத் தெரு, மண்ணடி, சென்னை – 600 001*
*5. மாணிக்கவாசகன். ஞா, (2007) வளையாபதி, குண்டலகேசி மூலமும் விளக்க உரையும், (முதல் பதிப்பு) உமா பதிப்பகம், 18/171, பவளக்காரத் தெரு, மண்ணடி, சென்னை – 600 001*
*6. சுபாஷ் சந்திரபோஸ்.ச, (2017) தண்டியலங்காரம், (மூன்றாம் பதிப்பு), இயல் வெளியீடு, 23பி/2739, தொப்புள் பிள்ளையார் கோவில் தெரு, தெற்கலங்கம், தஞ்சாவூர் – 613 001*
*7. சுபாஷ் சந்திரபோஸ்.ச, (2016) நன்னூல் - எழுத்ததிகாரம், (இரண்டாம் பதிப்பு), இயல் வெளியீடு, 23பி/2739, தொப்புள் பிள்ளையார் கோவில் தெரு, தெற்கலங்கம், தஞ்சாவூர் – 613 001*

********* ********* ********** ********* ********* ********** ********** **********